# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1980/34- 2016 අගෝස්තු මස 18 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.08.18

1980/34 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 18 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: 3/2/8/9/1
காணி அமைச்சின் இல.: 4/3/15/2010/VE/297

கிராமங்களை விஸ்தரிக்கும் நோக்கில் பகிர்ந்தளிப்ப தற்காக கீழ் குறிப்பிடும் காணிகளை அரசு எடுத்துக்கொள்ள தீர்மானித்துள்ளதாக 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

நுவரெலியா மாவட்டத்தில், கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில், மெதப்பனை வலயத்தில், மேத்தகம கிராமத்தில் அமைந்துள்ள அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. மூ. வ. ப 2900 மற்றும் 2013.11.07 ஆம் திகதியின் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள அளவில் 2. 9223 ஹெக்டயார் அளவான காணி

**1. துண்டு இலக்கம்: 1**

காணியின் பெயர்: தொம்பகஸ்தலாவ; கி. உ. பிரிவு: 465எச் - தொம்பகஸ்தலாவ; விபரம்: கிராம விஸ்தரிப்புக் காக; உரிமை கோருபவர்: காணி சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம்: 2.9223 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப் பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு, கொத்மலை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப் படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஐ. எம். சேனாநாயக்க,
பிரதேச செயலாளர்,
கொத்மலை.

பிரதேச செயலகம்,
கொத்மலை,
2016, ஓகத்து 12.

9 - 129


*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.